# 2020 தமிழ் போட்டிகள் / Tamil Competition

## திருக்குறள்/பழமொழிகள்

| S.No | Kural | Meaning | Kural No |
|---|---|---|---|
| 1 | துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத் துப்பாய தூஉ மழை | நல்ல உணவுகளைச் சமைக்கவும், சமைக்கப்பட்ட உணவுகளை உண்பவர்க்கு இன்னுமோர் உணவாகவும் பயன்படுவது மழையே | 12 |
| 2 | விசும்பின் துளிவீழின் அல்லால்மற் றாங்கே பசும்புல் தலைகாண் பரிது | மேகத்திலிருந்து மழைத்துளி விழாது போனால், பசும்புல்லின் நுனியைக்கூட இங்கே காண்பது அரிதாகிவிடும் | 16 |
| 3 | நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும் வானின் றமையா தொழுக்கு | எத்தனை பெரியவரானாலும் நீர் இல்லாமல் வாழமுடியாது; அந்த நீரோ மழை இல்லாமல் கிடைக்காது | 20 |
| 4 | துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து இறந்தாரை எண்ணிக்கொண் டற்று | ஆசைகளை விட்டு விலகியவரின் பெருமைக்கு, எண்ணிக்கையால் அளவு கூறுவது, இந்த உலகத்தில் இறந்து போனவர்களின் எண்ணிக்கையை எல்லாம் எண்ணுவது போலாகும். | 22 |
| 5 | உரனென்னுந் தோட்டியான் ஓரைந்தும் காப்பான் வரனென்னும் வைப்பிற்கோர் வித்து | மெய், வாய்,கண், மூக்கு, செவி என்னும் ஐந்து யானைகளும் தத்தம் புலன்கள் ஆகிய ஊறு, சுவை, ஒளி, நாற்றம், ஓசை ஆகியவற்றின் மேல் செல்லாமல், அவற்றை மன உறுதி என்னும் அங்குசத்தால் காப்பவன் எல்லாவற்றிலும் சிறந்ததாகிய வீட்டுலகிற்கு ஒருவிதை ஆவான் | 24 |
| 6 | நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து மறைமொழி காட்டி விடும் | நிறைவான வாக்குப் பெருமை உடைய மேன் மக்களின் உயர்வை, அவர்கள் இவ்வுலகில் சொன்ன மந்திரச் சொற்களே அடையாளம் காட்டிவிடும். | 28 |
| 7 | சிறப்பீனும் செல்வமும் ஈனும் றத்தினூஉங்கு ஆக்கம் எவனோ உயிர்க்கு | அறம், நான்கு பேர் முன் நமக்கு மேன்மையைத் தரும்; நல்ல செல்வத்தையும் கொடுக்கும். இத்தகைய அறத்தைக் காட்டிலும் மேன்மையானது நமக்கு உண்டா? | 31 |
| 8 | அறத்தினூஉங் காக்கமும் இல்லை அதனை மறத்தலின் ஊங்கில்லை கேடு | அறம் செய்வதை விட நன்மையும் இல்லை. அதைச் செய்ய மறப்பதைவிட கெடுதியும் இல்லை | 32 |
| 9 | ஒல்லும் வகையான அறவினை ஓவாதே செல்லும்வாய் எல்லாஞ் செயல் | இடைவிடாமல் இயன்ற மட்டும் எல்லா இடங்களிலும் அறச்செயலைச் செய்க. | 33 |
| 10 | அறத்தான் வருவதே இன்பமற் றெல்லாம் புறத்த புகழும் இல | அறத்துடன் வருவதே இன்பம்; பிற வழிகளில் வருவன துன்பமே; புகழும் ஆகா | 39 |
| 11 | செயற்பால தோரும் அறனே ஒருவற்கு உயற்பால தோரும் பழி | ஒருவன் செய்யத் தக்கது அறமே; விட்டுவிடத் தக்கவை தீய செயல்களே. | 40 |
| 12 | இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும் நல்லாற்றின் நின்ற துணை | மனைவியோடு வாழ்பவன்தான் பிள்ளைகள், பெற்றோர், உறவினர் என்னும் மூவர்க்கும் நல்ல வழியில் உதவுபவன். | 41 |
| 13 | அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது | மனைவி பிள்ளைகளிடத்தில் அன்பும், தேடிய பொருளை நட்பு சுற்றங்களுடன் பகிர்ந்து கொள்ளும் அறமும் இருந்தால் இல்வாழ்க்கையின் பண்பும் அதுவே; பயனும் அதுவே. | 45 |
| 14 | மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன் நன்கலம் நன்மக்கட் பேறு | ஒருவனுக்கு நற்குண நற்செயல்களை உடைய மனைவியே அழகு என்று அறிந்தோர் கூறுவர். அந்த அழகிற்கு ஏற்ற அணிகலன்கள் நல்ல பிள்ளைகளைப் பெறுவதே. | 60 |

# 2020 தமிழ் போட்டிகள் / Tamil Competition

## திருக்குறள்/பழமொழிகள்

| S.No | Kural | Meaning | Kural No |
|---|---|---|---|
| 15 | மக்கள்மெய் தீண்டல் உடற்கின்பம் மற்றவர் சொற்கேட்டல் இன்பம் செவிக்கு | பெற்ற பிள்ளைகளின் உடலைத் தழுவுவது உடலுக்கு இன்பம். அவர்களின் பேச்சைக் கேட்பது காதிற்கு இன்பம் | 65 |
| 16 | குழலினி தியாழினி தென்பதம் மக்கள் மழலைச்சொல் கேளா தவர் | பெற்ற பிள்ளைகள் பேசும் பொருளற்ற மழலைச் சொல்லைக் கேட்காதவர்தாம், குழலும் யாழும் கேட்க இனியவை என்பர். | 66 |
| 17 | மகன் தந்தைக் காற்றும் உதவி இவன்தந்தை என்நோற்றான் கொல்லெனும் சொல் | தன்னைக் கல்வி அறிவு உடையவனாய் ஆளாக்கிய தந்தைக்கு மகன் செய்யும் கைம்மாறு, பிள்ளையின் ஒழுக்கத்தையும் அறிவையும் கண்டவர், இப்பிள்ளையைப் பெறுவதற்கு இவன் தகப்பன் என்ன தவம் செய்தானோ என்று சொல்லும் சொல்லைப் பெற்றுத் தருவதே. | 70 |
| 17 | மகன் தந்தைக் காற்றும் உதவி இவன்தந்தை என்நோற்றான் கொல்லெனும் சொல் | தன்னைக் கல்வி அறிவு உடையவனாய் ஆளாக்கிய தந்தைக்கு மகன் செய்யும் கைம்மாறு, பிள்ளையின் ஒழுக்கத்தையும் அறிவையும் கண்டவர், இப்பிள்ளையைப் பெறுவதற்கு இவன் தகப்பன் என்ன தவம் செய்தானோ என்று சொல்லும் சொல்லைப் பெற்றுத் தருவதே. | 70 |
| 18 | அன்பீனும் ஆர்வம் உடைமை அதுஈனும் நண்பென்னும் நாடாச் சிறப்பு | குடும்பம், உறவு என்பாரிடத்துக் கொள்ளும் அன்பு, உலகத்தவரிடம் எல்லாம் உறவு கொள்ளும் விருப்பை உண்டாக்கும். அதுவே அனைவரையும் நட்பாக்கும் சிறப்பையும் உண்டாக்கும் | 74 |
| 19 | அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார் மறத்திற்கும் அஃதே துணை | அறத்திற்கு மட்டுமே அன்பு துணையாகும் என்று கூறுவோர் அறியாதவரே; மறத்திற்கும் கூட அதுவே காரணம் ஆகும். | 76 |
| 20 | இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி வேளாண்மை செய்தற் பொருட்டு | வீட்டில் இருந்து, பொருள்களைச் சேர்த்தும் காத்தும் வாழ்வது எல்லாம், வந்த விருந்தினரைப் பேணி அவர்களுக்கு உதவுவதற்கே ஆம். | 81 |
| 21 | செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான் நல்விருந்து வானத் தவர்க்கு | வந்த விருந்தினரைப் பேணி, வரும் விருந்தை எதிர்பார்த்து இருப்பவன் மறுமையில் வானத்தவர்க்கு நல்ல விருந்தினன் ஆவான். | 86 |
| 22 | மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து நோக்கக் குழையும் விருந்து | தொட்டு மோந்து பார்த்த அளவில் அனிச்சப்பூ வாடும்; நம் முகம் வேறுபட்டுப் பார்த்த அளவில் விருந்து வாடும். | 90 |
| 23 | முகத்தான் அமர்ந்தின்து நோக்கி அகத்தானாம் இன்சொ லினதே அறம் | பிறரைப் பார்க்கும்போது முகத்தால் விரும்பி, இனிமையாகப் பார்த்து, உள்ளத்துள் இருந்து வரும் இனிய சொற்களைச் சொல்வதே அறம் ஆகும். | 92 |
| 24 | துன்புறூஉம் துவ்வாமை இல்லாகும் யார்மாட்டும் இன்புறூஉம் இன்சொ லவர்க்கு | எவரிடமும் இன்பம் தரும் இனிய சொற்களைப் பேசுபவர்க்குத் துன்பம் தரும் வறுமை வராது. | 94 |
| 25 | அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை நாடி இனிய சொலின் | பிறர்க்கு நன்மை தரும் இனிய சொற்களை மனத்தால் எண்ணிச் சொன்னால், அவனுள்ளும், நாட்டிலும் அறம் வளரும்; பாவங்கள் குறையும். | 96 |
| 26 | சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும் இம்மையும் இன்பம் தரும் | பிறர்க்கு மனத்துன்பம் தராத இனிய சொல் ஒருவனுக்கு இம்மையிலும் மறுமையிலும் இன்பம் தரும். | 98 |

# 2020 தமிழ் போட்டிகள் / Tamil Competition

## திருக்குறள்/பழமொழிகள்

| S.No | Kural | Meaning | Kural No |
|---|---|---|---|
| 27 | இனிய உளவாக இன்னாத கூறல்<br>கனிஇருப்பக் காய்கவர்ந் தற்று | மனத்திற்கு இன்பம் தரும் சொற்கள் இருக்க, அவற்றை விட்டுவிட்டுத் துன்பம் தரும் சொற்களைக் கூறுவது, நல்ல பழம் இருக்க நச்சுக்காயை உண்பது போலாகும். | 100 |
| 28 | ஒழுக்க முடையவர்க் கொல்லாவே தீய<br>வழுக்கியும் வாயாற் சொலல் | மறந்தும் தீய சொற்களைத் தம் வாயால் கூறுவது, ஒழுக்கம் உடையவர்க்கு முடியாது. | 139 |
| 29 | நலக்குரியார் யாரெனின் நாமநீர் வைப்பின்<br>பிறற்குரியாள் தோள்தோயா தார் | அச்சந்தரும் கடலால் சூழப்பட்ட இவ்வுலகில் எல்லா நன்மைகளும் அடைவதற்கு உரியவர் எவர் என்றால், அடுத்தவனுக்கு உரியவளின் தோளைச் சேராதவரே | 149 |
| 30 | நிறையுடைமை நீங்காமை வேண்டின் பொறையுடைமை<br>போற்றி யொழுகப் படும் | நிறையுடைமை நீங்காமை வேண்டின்<br>பொறையுடைமை<br>போற்றி யொழுகப் படும். | 154 |
| 31 | மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந்தந்<br>தகுதியான் வென்று விடல் | மனச் செருக்கால் தீமை செய்தவரைப் பொறுமையால் வென்றுவிடுக. | 158 |
| 32 | அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்<br>கேடும் நினைக்கப் படும் | பொறாமை கொண்ட மனத்தவனின் உயர்வும், அது இல்லாத நல்லவனின் தாழ்வும் பற்றி ஆராய்க | 169 |
| 33 | படுபயன் வெஃகிப் பழிப்படுவ செய்யார்<br>நடுவன்மை நாணு பவர் | பிறர் பொருளைக் கவர்ந்து அனுபவிக்க எண்ணிப் பழி தரும் செயல்களை, நீதிக்கு அஞ்சுபவர் செய்ய மாட்டார். | 172 |
| 34 | பல்லார் முனியப் பயனில சொல்லுவான்<br>எல்லாரும் எள்ளப் படும் | பலரும் கேட்டு வெறுக்கப், பயனற்ற சொற்களைச் சொல்லுபவன் எல்லாராலும் இகழப்படுவான். | 191 |
| 35 | சீர்மை சிறப்பொடு நீங்கும் பயனில<br>நீர்மை யுடையார் சொலின் | இனிய குணத்தவர் பயனற்ற சொற்களைச் சொன்னால், அவர் பெருமையும், புகழும் அப்பொழுதே நீங்கிவிடும். | 195 |
| 36 | சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க<br>சொல்லிற் பயனிலாச் சொல் | சொற்களில் அறம், பொருள், இன்பம் ஆகிய பயன்தரும் சொற்களையே சொல்லுக; பயனற்ற சொற்களைச் சொல்லவேண்டா. | 200 |
| 37 | பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்<br>நயனுடை யான்கண் படின் | பிறரால் விரும்பப்படுபவனிடம் சேரும் செல்வம், உண்ணத் தகும், கனிதரும் மரம் ஊருக்கு உள்ளே பழுத்திருப்பதைப் போல எல்லார்க்கும் பொதுவாகும். | 216 |
| 38 | சாதலின் இன்னாத தில்லை இனிததூஉம்<br>ஈத லியையாக் கடை | சாவதை விடத் துன்பமானது வேறொன்றும் இல்லை, ஆனால் வறியவர்க்கு ஒரு பொருள் கொடுக்க முடியாதநிலை வந்தபோது அச் சாதலும் இனியதே ஆகும். | 230 |
| 39 | தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்<br>தோன்றலின் தோன்றாமை நன்று | பிறர் அறியுமாறு அறிமுகமானால் புகழ் மிக்கவராய் அறிமுகம் ஆகுக; புகழ் இல்லாதவர் உலகு காணக் காட்சி தருவதிலும், தராமல் இருப்பதே நல்லது. | 236 |
| 40 | வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது<br>வேண்டாமை வேண்ட வரும் | பிறவாமையை எப்போது விரும்புகிறோமோ அப்போது அந்த நிலை நமக்கு வர வேண்டும். ஆசையற்று இருப்பதை விரும்பும்போதுதான் அந்த நிலை நமக்கு உண்டாகும். | 362 |
| 41 | நன்மையும் தீமையும் நாடி நலம்புரிந்த<br>தன்மையான் ஆளப் படும் | ஒரு செயலை நம்மிடம் செய்யக் கொடுத்தால் அச்செயலின் நன்மை தீமை இரண்டையும் ஆராய்ந்து எது நன்மையோ அதையே செய்ய வேண்டும் | 511 |

# 2020 தமிழ் போட்டிகள் / Tamil Competition

## திருக்குறள்/பழமொழிகள்

| S.No | Kural | Meaning | Kural No |
|---|---|---|---|
| 42 | இல்லாரை எல்லாரும் எள்ளுவர் செல்வரை<br>எல்லாரும் செய்வர் சிறப்பு | பணம் இல்லாதவரை எல்லாரும் இகழ்வர். செல்வரையோ எல்லாரும் பெருமைப்படுத்துவர். | 752 |
| 43 | நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்<br>பின்னீர பேதையார் நட்பு | பிறை, நாளும் வளர்வதுபோல, அறிவுடையார் நட்பு வளரும்; முழு நிலவு தேய்வது போலப் பேதைகளின் நட்பு தேயும். | 782 |
| 44 | குணனும் குடிமையும் குற்றமும் குன்றா<br>இனனும் அறிந்தியாக்க நட்பு | ஒருவனது குணம், குடும்பப் பிறப்பு, குற்றம், குறையாத சுற்றம் ஆகியவற்றை அறிந்து நட்புக் கொள்க. | 793 |
| 45 | இன்பத்துள் இன்பம் பயக்கும் இகலென்னும்<br>துன்பத்துள் துன்பங் கெடின் | துன்பங்கள் எல்லாவற்றிலும் மிகக் கொடிதான மனவேறுபாடு எனும் துன்பம், ஒருவனது உள்ளத்துள் இல்லை என்றால், அது அவனுக்கு இன்பங்கள் எல்லாவற்றிலும் சிறந்த இன்பத்தைத் தரும். | 854 |
| 46 | வழிநோக்கான் வாய்ப்பன செய்யான் பழிநோக்கான்<br>பண்பிலன் பற்றார்க் கினிது | நீதி நூல்கள் சொல்லும் வழியைப் படித்து அறியாத, நல்லனவற்றைச் செய்யாத, அவை தெரியாமலே செயலாற்றுவதால் வரும் வழியையும் எண்ணாத, நல்ல பண்புகளும் இல்லாத அரசின் பகைமை, பகைவர்க்கு இனிது. | 865 |
| 47 | வகையறிந்து தற்செய்து தற்காப்ப மாயும்<br>பகைவர்கண் பட்ட செருக்கு | ஒரு செயலைச் செய்ய வேண்டிய முறையை அறிந்து, நம்மைப் பலப்படுத்துவதுடன் ரகசியங்களையும் நாம் காத்துக் கொண்டால், பகைவர் தங்கள் மனத்துள் நம்மை எதிர்க்க எண்ணிய செருக்கு அழியும். | 878 |
| 48 | ஆற்றுவார் ஆற்றல் இகழாமை போற்றுவார்<br>போற்றலுள் எல்லாம் தலை | எடுத்துக் கொண்ட செயல்களை இனிது முடிப்பவரின் வலிமைகளை அவமதியாமல் இருப்பது, தமக்குத் தீங்கு ஏதும் வராமல் காப்பவர் செய்யும் காவல்கள் எல்லாவற்றிலும் முதன்மையானது. | 891 |
| 49 | நிலத்திற் கிடந்தமை கால்காட்டும் காட்டும்<br>குலத்திற் பிறந்தார்வாய்ச் சொல் | நிலத்தின் இயல்பை அதில் விளைந்த பயிர்காட்டும்; அதுபோலக் குடும்பத்தின் இயல்பை அதில் பிறந்தவர் பேசும் சொல் காட்டும். | 959 |
| 50 | மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்<br>உயிர்நீப்பர் மானம் வரின் | மயிர்எலாம் இழந்துவிட்டால் உயிர் வாழ முடியாத கவரிமான் (சாமரம்) போன்றவர் தம் குடும்பப் பெருமை எல்லாம் அழிய நேர்ந்தால் உயிர் வாழமாட்டார். | 969 |

# 2020 தமிழ் போட்டிகள் / Tamil Competition

## திருக்குறள்/பழமொழிகள்

| S.No | Proverbs/ பழமொழிகள் |
|---|---|
| 1 | அச்சாணி இல்லாத தேர் முச்சாணும் ஓடாது. |
| 2 | அசைந்து தின்கிறது யானை, அசையாமல் தின்கிறது வீடு. |
| 3 | அடக்கம் உடையார் அறிஞர், அடங்காதவர் கல்லார். |
| 4 | அள்ளிக் கொடுத்தால் சும்மா, அளந்து கொடுத்தால் கடன். |
| 5 | ஆறு போவதே போக்கு அரசன் சொல்வதே தீர்ப்பு. |
| 6 | இங்கே தலை காட்டுகிறான், அங்கே வால் காட்டுகிறான். |
| 7 | இட்டார் பெரியோர் இடாதார் இழி குலத்தோர். |
| 8 | இரண்டு ஓடத்தில் கால் வைக்காதே. |
| 9 | இரும்படிக்கும் இடத்தில் ஈக்கென்ன வேலை? |
| 10 | இறுகினால் களி , இளகினால் கூழ். |
| 11 | உண்ட வீட்டுக்கு ரெண்டகம் நினைக்காதே. |
| 12 | உதட்டில் உறவு உள்ளத்தில் பகை. |
| 13 | உரலில் அகப்பட்டது உலக்கைக்கு தப்புமா? |
| 14 | ஊர் வாயை மூட உலைமுடி இல்லை. |
| 15 | ஊணுக்கு முந்துவான் வேலைக்குப் பிந்துவான். |
| 16 | எங்கே புகையுண்டோ அங்கே நெருப்பு உண்டு. |
| 17 | எச்சிற் கையால் காக்கை ஓட்டாதவன் பிச்சை கொடுப்பானா? |
| 18 | எடுக்கிறது பிச்சை ஏறுகிறது பல்லாக்கு. |
| 19 | எண்ணிச் செய்கிறவன் கெட்டி, எண்ணாமல் செய்கிறவன் மட்டி. |
| 20 | எரியும் கொள்ளிகளில் எந்தக் கொள்ளி நல்ல கொள்ளி? |
| 21 | எலிக்குத் திண்டாட்டம் பூனைக்குக் கொண்டாட்டம் |
| 22 | ஏறச் சொன்னால் எருது கோபம், இறங்கச் சொன்னால் நொண்டிக்குக் கோபம். |
| 23 | ஒரு நாள் கூத்துக்கு மீசையை எடுக்கவா? |
| 24 | ஓட்டைக் கப்பலுக்கு ஒன்பது மாலுமி. |
| 25 | கங்கையில் மூழ்கினாலும் காக்கை அன்னம் ஆகுமா? |
| 26 | கடல் மீனுக்கு நீச்சுப் பழக்க வேண்டுமா? |
| 27 | கடித்த சொல்லினும் கனிந்த சொல்லே நன்மை. |
| 28 | கட்டினவனுக்கு ஒரு வீடானால் கட்டாதவனுக்கு பல வீடு. |
| 29 | கண் கெட்ட பின்னர் சூரிய நமஸ்காரம். |
| 30 | கண்டால் ஒரு பேச்சு, காணாவிட்டால் ஒரு பேச்சு. |
| 31 | கற்றது கைம்மண்ணளவு கல்லாதது உலகளவு. |
| 32 | கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாஞ் சிறப்பு. |
| 33 | கனவில் கண்ட பணம் செலவிற்கு உதவுமா? |
| 34 | காரியமாகும் வரையில் கழுதையையும் காலைப்பிடி. |
| 35 | காலம் செய்கிறது ஞாலம் செய்யாது. |
| 36 | காலுக்குதக்க செருப்பும்,கூலிக்குத் தக்க உழைப்பும். |
| 37 | காற்று உள்ளபோதே தூற்றிக்கொள். |
| 38 | குடல் காய்ந்தால் குதிரையும் வைக்கோல் தின்னும். |

# 2020 தமிழ் போட்டிகள் / Tamil Competition

## திருக்குறள்/பழமொழிகள்

| S.No | Proverbs/ பழமொழிகள் |
|---|---|
| 39 | குட்டுப் பட்டாலும் மோதிரக்கையால் குட்டுப்படவேண்டும். |
| 40 | குரைக்கிற நாய் கடிக்காது. |
| 41 | குலம் குப்பையிலே, பணம் பந்தியிலே |
| 42 | குறைகுடம் தளும்பும், நிறைகுடம் தளும்பாது. |
| 43 | குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும். |
| 44 | குப்பையிற் கிடந்தாலும் குன்றிமணி நிறம் போகுமா? |
| 45 | குரு இலார்க்கு வித்தையுமில்லை, முதல் இல்லார்க்கு ஊதியமில்லை. |
| 46 | குனியக் குனியக் குட்டுவான், குனிந்தவன் நிமிர்ந்தால் குட்டினவன் ஓடுவான். |
| 47 | கூடி வாழ்ந்தால் கோடி நன்மை. |
| 48 | கூழானாலும் குளித்துக் குடி; கந்தையானாலும் கசக்கிக் கட்டு. |
| 49 | கூழுக்கும் ஆசை, மீசைக்கும் ஆசை. |
| 50 | கெடுவான் கேடு நினைப்பான். |
| 51 | கெட்டாலும் கெட்டி கெட்டியே, கிழிந்தாலும் பட்டு பட்டே. |
| 52 | கைக்கு எட்டினது வாய்க்கு எட்டவில்லை. |
| 53 | கையிலே காசு வாயிலே தோசை. |
| 54 | கொடுக்கிறவனைக் கண்டால் வாங்குகிறவனுக்கு இளக்காரம். |
| 55 | கொலைக்கு அஞ்சாதவன் பழிக்கு அஞ்சான். |
| 56 | கொல்லைக் காட்டு நரி சலசலப்புக் அஞ்சுமா? |
| 57 | கோபம் உள்ள இடத்தில் குணம் உண்டு. |
| 58 | சட்டியில் இருந்தால் தான் அகப்பையில் வரும். |
| 59 | சாட்சிக்காரன் காலில் விழுவதிலும் சண்டைக்காரன் காலில் விழலாம். |
| 60 | சிறு துரும்பும் பல் குத்த உதவும். |
| 61 | சாது மிரண்டால் காடு கொள்ளாது. |
| 62 | சின்ன மீனைப் போட்டுப் பெரிய மீனைப் பிடி. |
| 63 | சுண்டைக்காய் காற்பணம், சுமை கூலி முக்காற்பணம். |
| 64 | சுவரை வைத்துதான் சித்திரம் வரையவேண்டும். |
| 65 | சூடு கண்ட பூனை அடுப்பங் கரையிற் சேராது. |